| Headline | Involvement in ISIS inappropriate, haram - Says Mufti | | |
|---|---|---|---|
| MediaTitle | Tamil Nesan | | |
| Date | 13 Sep 2014 | Language | Tamil |
| Circulation | 35,000 | Readership | 125,000 |
| Section | News | Color | Full Color |
| Page No | 1,14 | ArticleSize | 319 cm² |
| AdValue | RM 1,624 | PR Value | RM 4,872 |
| | | | |



# இஸ்லாமிய நாட்டை உருவாக்கப் போரிடும் மலேசியர்கள் இஸ்லாம் நெறி முறைகளுக்கு எதிரானவர்கள்!



**கோலாலம்பூர், செப். 13 -** ஈராக்கிலும் சிரியாவிலும் இஸ்லாமிய நாட்டை உருவாக்கும் நோக்கில் தீவிரவாதிகளுடன் இணைந்து போரிடும் மலேசியர்கள் இஸ்லாமிய நெறிமுறைகளுக்கு எதிராகச் செயல்படுவதாக சமய அறிஞர்கள் கருதுகின்றனர்.

பேரா மாநில முப்தியான டான்ஸ்ரீ ஹாருஸ்ஸானி ஸக்காரியா இது பற்றிக் குறிப்பிடும் போது, ஐசிஸ் எனப்படும் இஸ்லாமிய நாட்டை உருவாக்க

**14ஆம் பக்கம் பார்க்க...**

## இஸ்லாமிய நாட்டை....

முனைந்திருக்கும் தீவிரவாதிகள் சக சமயத்தவர்களை எதிர்த்து கொல்லும் செயலில் ஈடுபட்டிருப்பதால் அது சமயத்திற்குப் போராடும் (ஜிஹாட்) செயலாக கருதப்படாது என தெரிவித்துள்ளார்.

அச்செய்கை அந்தந்த நாடுகளுக்கு எதிராக தொடுத்திருக்கும் போராகவே பொருள்படும் என்றும் அங்கு சென்று போராடும் தீவிரவாதிகளின் போராட்டம் இஸ்லாத்திற்கு எந்தப் பயனையும் கொண்டுவரப் போவதில்லை. ஏனெனில் ஐசிஸ்ஸின் போராட்டம் இஸ்லாத்திற்கு எதிராக இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

கிளந்தான் மாநில முப்தி, டத்தோ முகமட் சுக்ரி, ஜிஹாட் என்ற வார்த்தையின் உண்மையான பொருளைப் புரிந்து கொள்ள வேண்டுமென்றும் ஜிஹாட் என்பது சமயத்திற்காக போராடுவதே தவிர அரசியல் நோக்கம் கொண்டு சொந்த இனம் மற்றும் சமயத்தினரைக் கொன்று குவிப்பது அல்ல என அவர் குறிப்பிட்டார்.

ஓர் இயக்கத்தில் சேரும் முன்னர், அதனை நன்கு தெரிந்து, அதனை ஆராய்ந்த பின்னர் அதிக கவனமாக அதில் சேர வேண்டுமென அவர் அறிவுறுத்தினார்.

வட மாநில பல்கலைக்கழக விரிவுரையாளரான பேராசிரியர் டாக்டர் அஹ்மாட் மர்தாடா முகமட் மத்திய கிழக்கி ஐசிஸ் தீவிரவாதக் குழுவோடு போராட மலேசியர்களுக்கு எவ்வித கடப்பாடும் இல்லையென்றும் அங்கு நடக்கும் போராட்டம் நாட்டை ஆக்கிரமிக்கும் நடவடிக்கையாகும் என அவர் வலியுறுத்தினார்.

இந்தத் தீவிரவாதிகளின் நடவடிக்கை இஸ்லாம் சமூகத்தினரின் ஆதரவைப் பெற தவறியுள்ளதாகவும் குறிப்பாக மத்திய கிழக்கு நாடுகளின் நிதியுதவியைப் பெறத் தவறியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எனவே, ஐசிஸ்ஸின் குறிக்கோள், நடவடிக்கை, அதனால் ஏற்படும் பாதகங்களை மக்களுக்கு அரசு எடுத்துச் சொல்ல வேண்டுமெனவும் உள்ளூர் மக்களை அந்த இயக்கங்களுக்காகச் சேர்க்கும் நடவடிக்கையை நிறுத்த அரசு ஆவன தகுந்த நடவடிக்கையை எடுக்க வேண்டுமெனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

இதனிடையே இஸ்லாமிய பல்கலைக்கழக பேராசிரியர் டத்தோ டாக்டர் மஹ்மூட் சுஹ்டி அப்துல் மஜீட், ஜிஹாட்டுக்காக போராடுவது ஒவ்வொரு நாட்டுக்கும் வித்தியாசமானதென்றும் மலேசிய உலாமாக்கள் அளிக்கும் பாத்வா விளக்கவுரைகளின் படி நடக்கும்படி அவர் முஸ்லிம் சமூகத்தவரைக் கேட்டுக் கொண்டார்.

மத்திய கிழக்கு உலாமாக்கள் வழங்கும் சமய கோட்பாடுகளை முழுமையாகப் பின்பற்ற வேண்டிய அவசியம் ஏதுமில்லை என்றும் பிரச்னைகளைக் களைய மலேசியா வேறு வகையான அணுகுமுறைகளைக் கொண்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அண்மையில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 4 பேர் இந்தத் தீவிரவாதக் கும்பலோடு இணைந்து மத்திய கிழக்கில் போராடுவதாக வெளிவந்த செய்திக்குப் பின்னர் தீவிரவாதக் குழுக்களின் செய்திகள் பரவலான வெளியிடப்பட்டு வருகின்றன.

Powered by: iSENTIA